රාජ්‍ය පරිපාලන, ආපදා කළමනාකරණ සහ පශු සම්පත් සංවර්ධන අමාත්‍යාංශය
**பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு**
**Ministry of Public Administration, Disaster Management and Livestock Development**

ඒකාබද්ධ සේවා අංශය | **இணைந்த சேவைகள் பிரிவு** | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07,ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி:**(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்:**(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/A/අන්තර්ග්‍රහණ
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி: / Date: 2019.10.23

*சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்*
*திணைக்களத் தலைவர்கள்*
*மாவட்டச் செயலாளர்கள்*
*பிரதேச செயலாளர்களுக்கு*

***<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III மற்றும் II இற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகர்களின் சம்பள படிநிலையில் உள்ள முரண்பாடுகளை சரி செய்வது தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்குதல்</u>***

*மேற்படி விடயம் தொடர்பாக ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் அவ்வப்போது கடிதங்கள் அனுப்பப்பட்டாலும், 2011.08.01 ஆந் திகதியன்று அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் சம்பள படிநிலையினைத் தீர்மானித்தல் மற்றும் பதவியுயர்வுகள் குறித்து பின்வரும் முறைமைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் என தயவுடன் அறியத்தருவதோடு இவ் விடயம் தொடர்பான பொது அறிவுறுத்தல் தொகுதியின் இணைப்பு 01 மற்றும் 02 ஆக இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

02. *2012.09.1774 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 07/இனையுடைய அதிவிசேட வர்த்தமானிப் 31 அறிவித்தல ் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2012.02.1745 ஆந் திகதிய மற்றும் 14/ஆம் இலக்கத்துடைய 11 அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் 10 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மற்றும் 14 குறிப்பின்/ஆம் இலக்க அரசா 2012ங்க நிர்வாக சுற்றறிக்கையின் படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதன் அடிப்படையில் 2011.08.ஆந் 01 திகதியிலிருந்து வலுப்பெறும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்சேவையின் II ஆம் மற்றும் III ஆந் தரத்துக்கு உள்ளீர்க்கப்படுதல் இடம்பெற்றுள்ளது.*

03. *அதற்கமைய 2011.08. ஆந் திகதிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் 01III ஆந் தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலரொருவரின் சம்பள படிநிலையைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள* ***இணைப்பு 01*** *இன் படி மற்றும் 2011.08.ஆந் திகதிய அபிவிருத்தி 01 உத்தியோகத்தர் II ஆந் தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரின் சம்பள படிநிலைகளைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தற் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு இன் படி நடவடிக்கை 02 எடுக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.*

***ஒப்பம்./ கே.பி.வீ.எம்.ஜே.கமகே***
***இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்***

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III மற்றும் II இற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் சம்பள படிநிலையில் உள்ள முரண்பாடுகள் நிவர்த்தி செய்வது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குதல்</u>**

***01. 2011.08.01 ஆந் திகதியன்று அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆந் தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் சம்பள படிநிலைகளைத் தயாரித்தல்.***

*1.1. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (IV) MN 04 – 2006 (ஏ) ரூபா. 15,215 – 10 x 2015 – 4 x 240 – 7 x 320 – 15 x 3560 – ரூபா. 25,965 ( மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் இப் பதவிக்கு உரித்தாவதுடன் ஆரம்பச் சம்பள படி முறை ரூபா. 15,215 ஆகும்.*

*1.2. ஏற்கனவே இச் சம்பள அளவுத்திட்டத்தில் குறித்த மாதாந்த சம்பளம் கிடைக்கப் பெறுவதால் இவ் உள்ளீர்த்தல் காரணமாக சம்பளத்தில் அல்லது சம்பள ஏற்றத் திகதியில் எதுவித மாற்றங்களும் ஏற்படுவதில்லை.*

*1.3. அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் 10 வருடங்களையுடைய முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தின் இறுதியில் பொதுவான செயலாற்றுகையின் அடிப்படையில் II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தல் இடம்பெறும். அதன்போது அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 6/2006(IV) இற்கு ஏற்ப உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. 15,215 – 10 x 2015-4x240-7x320-15x360-25,965/- ஆகும். அபிவிருத்தி உத்தியோகத்தர் II ஆந் தரத்துக்குரிய ஆரம்பச் சம்பளப் படிமுறை ரூபா. 17,605 ஆகும்.*

*உதாரணம் :- 2005.10.14 ஆந் திகதியன்று நியமனம் கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் உரித்துடைய சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதன் அடிப்படையில் 2011.08.01 ஆந் திகதி முதல் வலுப்பெறும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளதோடு, அதன் போது ஆரம்ப சம்பளப் படிமுறை ரூபா. 15,215 ஆகும். அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணத்தின் 12.1.1 இன் கீழ் அவ் உத்தியோகத்தர் 2015.10.14 ஆந் திகதி முதல் வலுப்பெறும் வகையில் பொதுவான செயலாற்றுகையின் அடிப்படையில் II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவார். அதன் போது அபிவிருத்தி உத்தியோகத்தர் II ஆந்தரத்துக்குரிய ஆரம்ப சம்பளப் படிமுறை ரூபா. 17,605 ஆகும்.*

***கவனத்திற் கொள்ளவும் :- உத்தியோகத்தரின் சம்பளம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கு ஏற்ப 2016.01.01 ஆந் திகதி முதல் MN 04-2016 – ரூபா. 31490-10x445-11x660-10x730-5x750-54250 உரித்துடைய சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தப்படுதல் வேண்டும்.***

**இணைப்பு *02***

**02. <u>*2011.08.01* ஆந் திகதியில் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் *II* இற்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தரின் சம்பளப் படிநிலையைத் தயாரித்தல்</u>**

*2.1.* அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை *06/2006 (IV) MN 04 – 2006 (ஏ)* ரூபா. *15,215 – 10 x 2015 – 4 x 240 – 7 x 320 – 15 x 3560 –* ரூபா. *25,965 (* மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் இப் பதவிக்கு உரித்தாவதுடன் ஆரம்பச் சம்பள படி முறை ரூபா. *17,605* ஆகும். பத்தாம் *(10)* வேதன ஏற்றத்தை உழைத்ததன் பிற்பாடு *2011.08.01* ஆந் திகதி வரை *MN4-2006(ஏ)* சம்பள அளவுத்திட்டத்தில் *II* ஆந் தரத்தில் " பதவியுயர்வு பெறா வகுதி" இன் கீழ் உரித்துடைய சம்பள ஏற்றத்தை வழங்குதல் வேண்டும்.

*2.2.* அதற்கமைய *2011.08.01* ஆந் திகதி முதல் *II* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமையால், அப் பதவியுயர்வை உத்தியோகத்தருக்கு வழங்கி சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு, குறித்த சம்பள மாற்றத்தை மேற்கொள்வது தாபன விதிக்கோவையின் *VII* ஆம் அத்தியாயத்தின் *5* ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதன் படி அலுவலரின் வேதன ஏற்றத் திகதி ஆகஸ்ட் மாதம் *01* ஆந் திகதியாக கருதப்படுதல் வேண்டும்.

*2.3. 2018.09.10* ஆந் திகதிய இணைந்த சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் *05/2018* இன் *02.2* ஆம் ஏற்பாடுகளின் படி *I* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கு உரித்துடமை பெறும் திகதியில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமை காரணமாக குறித்த பதவியுயர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நமவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அத்திகதி முதல் *MN4-2006(ஏ)* சம்பள அளவுத்திட்டத்தில் *I* ஆந் தரத்துக்கு உரிய சம்பள படிமுறை கிடைக்கப்பெறுவதோடு குறித்த சம்பளத்தை நிர்ணயிப்பது தாபன விதிக்கோவையின் *VII* ஆம் அத்தியாயத்தின் *5* ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

உதாரணம்:- *(01)*

*i.* *2000.05.16* ஆந் திகதியன்று நியமனம் கிடைக்கப்பெற்ற அலுவலரொருவர் உரிய சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதன் அடிப்படையில் *2011.08.01* ஆந் திகதி முதல் வலுப்பெறும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் *II* ஆந் தரத்துக்கு உள்ளீர்க்கப்படுவார்கள்.

*ii.* *2010.05.16* ஆந் திகதியன்று வேதன ஏற்றத்தை (*10* ஆவது) உழைத்ததன் பின்னர் *2011.08.01* ஆந் திகதி வரை *MN4 – 2006 (ஏ)* சம்பள அளவுத்திட்டத்தின் *II* ஆந் தரத்தில் "பதவியுயர்வு பெறா வகுதி" இன் கீழ் உரித்துடைய வேதன ஏற்றத்தை வழங்குதல் வேண்டும்.

*iii.* *2011.08.01* ஆந் திகதி முதல் *II* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதால் அப் பதவியுயர்வினை உத்தியோகத்தருக்கு வழங்கி சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு, குறித்த சம்பள மாற்றம் மேற்கொள்ளல் தாபன விதிக்கோவையின் *VII* ஆம் அத்தியாயத்தின் *5* ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி இடம்பெறுதல் வேண்டும். அதற்கமைய உத்தியோகத்தரின் வேதன ஏற்றத் திகதி ஆகஸ்ட் மாதம் *01* ஆக கருதப்படுதல் வேண்டும்.

iv. எவ்வாறாயினும், இவ் உத்தியோகத்தரின் நியமனத் திகதி 2000.05.16 ஆந் திகதியாகையால், குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்ததன்பேரில் 2020.05.16 ஆந் திகதிக்கு I ஆந் தரத்துக்கு பதவியுயர்வுக்குரிய உரித்துடமை காணப்படுகின்றது. அதற்கமைய,

- I ஆந் தரத்துக்கான வேதன ஏற்றத் திகதி மே 16 ஆகும் என்பதோடு
- சம்பளத்தை தீர்மானிப்பது தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி இடம்பெறுதல் வேண்டும்.

***உதாரணம் :- 02***

***i.*** 1997.05.15 ஆந் திகதியன்று நியமனம் கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் குறித்த சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதன் அடிப்படையில் 2011.08.01 ஆந் திகதி முதல் வலுப்பெறும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆந் தரத்துக்கு உள்ளீர்க்கப்படுவார்.

***ii.*** 2007.05.15 ஆந் திகதிக்கு வேதன ஏற்றத்தை (10 ஆவது) உழைத்ததன் பின்னர் 2011.08.01 ஆந் திகதி வரை MN4-2006 (ஏ) என்ற சம்பள அளவுத்திட்டத்தின் II ஆந் தரத்தில் " பதவியுயர்வு பெறா வகுதி" இன் கீழ் குறித்த வேதன ஏற்றத்தை வழங்குதல் வேண்டும்.

***iii.*** 2011.08.01 ஆந் திகதி முதல் II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதால் அப் பதவியுயர்வினை அவ் உத்தியோகத்தருக்கு வழங்கி சம்பளம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, குறித்த சம்பள மாற்றங்களை தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதற்கமைய உத்தியோகத்தரின் வேதன ஏற்றத் திகதி ஆகஸ்ட் மாதம் 01 ஆந் திகதியாக கருதப்படுகின்றது.

***iv.*** எவ்வாறாயினும், அவ் உத்தியோகத்தரின் நியமனத் திகதி 1997.05.15 ஆகையால், குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதன் அடிப்படையில் 2017.05.15 ஆந் திகதிக்கு I ஆந் தரத்துக்கு பதவியுயர்வு கிடைப்பதற்கான உரிமை உண்டு. அதற்கமைய,

- I ஆந் தரத்தின் வேதன ஏற்றத் திகதி மே 15 என்பதோடு
- சம்பளத்தை நிர்ணயிப்பது தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

***கவனத்திற் கொள்ளவும் :- உத்தியோகத்தரின் சம்பளம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கு ஏற்ப 2016.01.01 ஆந் திகதி முதல் MN 04-2016 – ரூபா. 31,490-10x445-11x660-10x730-5x750-54,250 உரித்துடைய சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தப்படுதல் வேண்டும்.***